**செய்தி வெளியீடு எண்: 969** **நாள்:17.12.2020**

**<u>இன்று (17.12.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் பெரம்பலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,

பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவல் தடுப்புப் பணிகள் மற்றும் அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களின் செயல்பாடுகள் குறித்து நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் பங்குபெற்றுள்ள அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மருத்துவ நிபுணர்கள் வழங்கிய ஆலோசனைகளை மாவட்ட நிர்வாகத்திடமும், சுகாதாரத் துறையிடமும் பின்பற்ற அறிவுறுத்தி, முழுமூச்சாக நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக நேற்றையதினம் ஒருவர்கூட பாதிக்கப்படாத சூழ்நிலையை பெரம்பலூர் மாவட்டத்தில் காண முடிகிறது. எனவே சிறப்பான தடுப்புப் பணிகளை மேற்கொண்ட மாவட்ட நிர்வாகம், சுகாதாரத் துறை மற்றும் பல்வேறு துறைகளுக்கு என்னுடைய பாராட்டுகளை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன். தேனி மாவட்டம் தவிர்த்து, தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டங்களுக்கும் நானே நேரடியாகச் சென்று இந்நோய்ப் பரவல் தடுப்புப் பணிகள் குறித்து ஆலோசனைகளை வழங்கினேன். சென்னை மாநகராட்சியிலும் ஆலோசனைக் கூட்டம் நடத்தப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும் தொற்று ஏற்பட்டவர்களைக் காணமுடிந்தபோது, இறுதியாக பெரம்பலூர் மாவட்டத்தில் ஒருவருக்குக்கூட தொற்று ஏற்படாத நிலையுள்ளது பாராட்டுக்குரியது. இது நாம் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்கு கிடைத்த பலன். எனவே இதற்காக பாடுபட்ட அனைத்து அரசு அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பெரம்பலூர் மாவட்டத்தில், நேற்றையதினம் வரை இந்நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் 2,252 நபர்கள், குணமடைந்தவர்கள் 2,225 நபர்கள், இறந்தவர்கள் 21 நபர்கள். 16.12.2020 அன்று இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் எவருமில்லை, இறப்பும்

கிடையாது. தற்போது சிகிச்சை பெற்று வருபவர்கள் 6 நபர்கள். 16.12.2020 வரை 63,639 பரிசோதனைகள் நடைபெற்றுள்ளன. நேற்றையதினம் மட்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் 502 நபர்கள். இந்த மாவட்டத்தில் பரிசோதனை நிலையங்கள் இரண்டு உள்ளன. இந்நோய்த் தொற்றுப் பரவல் ஏற்பட்டவர்களை குணமடையச் செய்வதற்கு போதிய அளவு மருத்துவமனைகள், படுக்கை வசதிகள் அமைக்கப்பட்டு, போதிய மருத்துவ உபகரணங்கள் கையிருப்பில் உள்ளன. N-95 முகக்கவசம், மும்மடிக் முகக்கவசம், PPE Kits, தெர்மல் ஸ்கேனர், RT-PCR Kits, Zinc மற்றும் Multi-vitamin மாத்திரைகள் இம்மாவட்டத்தில் போதிய அளவு கையிருப்பில் உள்ளன. இந்நோய்ப் பரவலைத் தடுக்க, அரசால் நியமிக்கப்பட்ட மருத்துவ நிபுணர்கள் குழு வழங்கிய ஆலோசனைகளின்படி, அனைத்து பகுதிகளிலும் காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டன. இம்மாவட்டத்தில் நாளென்றுக்கு 30 காய்ச்சல் முகாம்கள் என்ற அளவில், நேற்றையதினம் வரை 7,221 காய்ச்சல் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு, அதில் 1,88,785 நபர்களுக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்றுப் பரவலால் பாதிக்கப்பட்டவர்களை கண்டறிய சுகாதாரத் துறை, உள்ளாட்சித் துறை மூலமாக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் வீடு வீடாகச் சென்று, வீட்டிலுள்ளவர்களுக்கு காய்ச்சல், சளி, தொண்டை வலி, இருமல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக அவர்களை பரிசோதனைக்கு உட்படுத்தி சிகிச்சை அளித்து குணமடையச் செய்ததோடு மட்டுமல்லாமல், எந்தவொரு பகுதியிலும் தொற்று ஏற்பட்டால் அதை, மாவட்ட நிர்வாகம் / சுகாதாரத் துறை கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக அந்தப் பகுதிக்கு நடமாடும் மருத்துவக் குழுவை அனுப்பி, அந்தப் பகுதி மக்களுக்கு பரிசோதனை செய்து நோய் அறிகுறி உள்ளவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றே இல்லை என்ற நிலை உருவாக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் ஏதும் இல்லை. இந்நோய்த் தொற்றுப் பரவலைத் தடுக்க இம்மாவட்டத்தில் செலவழிக்கப்பட்ட தொகை ரூபாய் 6.48 கோடியாகும். இவ்வாறு பல்வேறு வகைகளில் இந்நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்ட மாவட்ட நிர்வாகத்திற்கு மீண்டும் ஒருமுறை என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள ஏழை, எளிய மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க பொதுமக்கள் அரசை நாடிச் செல்வதைத் தவிர்த்து, அரசே மக்களை நாடிச் சென்று, மக்களுக்குத் தேவையான உதவிகளை மேற்கொள்ள, நான் ஏற்கனவே சட்டமன்றத்தில் சட்டப்பேரவை விதி 110–ன் கீழ், முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் முகாம் நடத்தப்படுமென்று அறிவித்ததன் அடிப்படையில் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் முதலமைச்சரின் சிறப்பு மக்கள் குறை தீர்க்கும் முகாம்கள் நடத்தப்பட்டன. பெரம்பலூர் மாவட்டத்தில் 152 கிராமங்களில் நடைபெற்ற இந்த முகாம்களில் பெறப்பட்ட 9,844 மனுக்களில் 4,498 மனுக்கள் தகுதியானவை என்று கண்டறியப்பட்டுள்ளது. இதில் பட்டா மாற்றம் ஏற்பு 1,374 மனுக்கள், முதியோர் ஓய்வூதியத் தொகை திட்டத்தின் கீழ் ஏற்கப்பட்டவை 1,111 மனுக்கள். 2019–20ஆம் நிதியாண்டில் 6,000 நபர்களுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு 100 விழுக்காடு இம்மாவட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது பாராட்டுக்குரியது. சமூக பாதுகாப்புத் திட்டத்தில் அனைத்து ஓய்வூதிய திட்டங்களின் மூலம் 45,857 பயனாளிகளுக்கு ரூபாய் 1,000 வீதம் மாதாந்திர ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

பொதுப்பணித்துறையில், நபார்டு திட்டத்தின் கீழ், வேப்பத்தட்டை வட்டம், தொண்டமாந்துறை கிராமத்தில் கல்லார் ஓடையின் குறுக்கே ரூபாய் 33.07 கோடி மதிப்பீட்டில் விசுவகுடி நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டுள்ளது. நபார்டு திட்டத்தின் கீழ் குன்னம் வட்டம், கீழகுடிக்காடு கிராமம் வெள்ளாறின் குறுக்கே ரூபாய் 8.11 கோடி மதிப்பீட்டில் அணைகட்டு கட்டும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. நபார்டு திட்டத்தின் கீழ், வேப்பந்தட்டை வட்டம் வி.களத்தூர் கிராமம் கல்லாற்றின் குறுக்கே ரூபாய் 8 கோடி மதிப்பீட்டில் அணை கட்டும் பணி நிறைவு பெற்றுள்ளது. ஆலத்தூர் வட்டம் கொட்டரை கிராமம் மருதையாற்றின் குறுக்கே ரூபாய் 92.70 கோடி மதிப்பீட்டில் புதிய நீர்த்தேக்கம் அமைக்கும் பணிகள் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகிறது. வேப்பந்தட்டை வட்டம், வாலிகண்டாபுரம் கிராமத்தில் ரூபாய் 79 இலட்சம் மதிப்பீட்டில் வாலிகண்டாபுரம் அணைக்கட்டு புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

பொன்மனச்செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவின்போது, விசுவக்குடி அணைப் பகுதியில் சுற்றுலா மேம்பாட்டிற்கான அடிப்படை வசதிகள் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படுமென்று என்னால் அறிவிக்கப்பட்ட பணிகள் நிறைவு பெற்று இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குன்னம் வட்டம், வடக்கலூர் அக்ரஹாரம் கிராமத்தில் சின்னாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைக்கட்டினை ரூபாய் 5.94 கோடி மதிப்பீட்டில் மறு கட்டுமானம் செய்யும் பணி மற்றும் வேப்பந்தட்டை வட்டம், வி.களத்தூர் கிராமத்தில் கல்லார் ஆற்றின் குறுக்கே ரூபாய் 6.2 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி 2020–21ஆம் ஆண்டில் என்னால் அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது. வேப்பந்தட்டை வட்டம், பாண்டகபாடி கிராமம் கல்லாற்றின் குறுக்கே ரூபாய் 6.70 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை கட்டும் பணி மற்றும் வேப்பந்தட்டை வட்டம், வெங்கலம் கிராமத்தில், கல்லாறு ஆற்றின் குறுக்கே ரூபாய் 5.35 கோடி மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கும் பணி, குன்னம் வட்டம், எழுமூர் ஓடையின் குறுக்கே ரூபாய் 8.56 கோடி மதிப்பீட்டில் ஒரு தடுப்பணை அமைக்கும் பணி ஆகியவை 2020–21ஆம் ஆண்டில் என்னால் அறிவிக்கப்பட்டுள்ளது, பணிகள் விரைவில் தொடங்கப்படவுள்ளது.

குடிமராமத்துத் திட்டத்தின் கீழ், பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் 38 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு ரூபாய் 5.97 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பணிகள் நடைபெறுகின்றன. 2020–21 ஆம் ஆண்டில் குடிமராமத்து திட்டத்தில் 14 பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, ரூபாய் 3.58 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இதில் 7 பணிகள் நிறைவடைந்துள்ளன, மீதமுள்ள 7 பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையில் பெரம்பலூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலக கட்டும் பணி முடிக்கப்பட்டு 4.11.2020 அன்று திறந்து வைக்கப்பட்டிருக்கின்றது. நெடுஞ்சாலைத் துறையில், பெரம்பலூர் நகருக்கு மூன்றாம் கட்ட புறவழிச்சாலை, துறையூர்–பெரம்பலூர் சாலை செஞ்சேரி கிராமத்திலிருந்து, தேசிய நெடுஞ்சாலை எண்.45 சிறுவாச்சூர் கிராமத்தில் இணையும் வகையில் புறவழிச்சாலை அமைக்க என்னால் அறிவிக்கப்பட்டு, விரிவான

திட்ட வரைவு அறிக்கை ரூபாய் 25 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. பெரம்பலூர் மாவட்டம், திருவாளந்துறை கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய சாலை மற்றும் கடலூர் மாவட்டம், கீழக்கல்பூண்டி கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய சாலை ஆகியவற்றை இணைக்கும் வகையில் வெள்ளாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் 10.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் என்னால் அறிவிக்கப்பட்டு, பணிகள் விரைவில் துவங்கப்படும். ஆசிய வளர்ச்சி வங்கி நிதியுதவியுடன் துறையூர்– பெரம்பலூர் மாநில நெடுஞ்சாலை எண், 142–ல் பெரம்பலூர் மாவட்ட எல்லையில் 22.70 கிமீ நீளத்திற்கு ரூபாய் 148.30 கோடி மதிப்பீட்டில் இருவழிச் சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அறிவிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யும் நிலையில் உள்ளது. விரைவில் பணிகள் துவங்கப்படவுள்ளது.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரை, பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தில், 2016–2017 முதல் 2019–20 வரை, பெரம்பலூர் மாவட்டத்தில் இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 15 கோடியே 43 இலட்சம் ஒப்பளிப்பு செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சுமார் 47,176 விவசாயிகள் பயனடைந்திருக்கின்றனர். 2016–2017ஆம் ஆண்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் ஏற்பட்ட கடும் வறட்சியின் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூபாய் 50 கோடியே 53 இலட்சம் இழப்பீட்டுத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் 2018–19 ஆம் ஆண்டில் மக்காச்சோளப் பயிர் அமெரிக்க படைப்புழுவால் தாக்கப்பட்டு பெரும் நஷ்டத்திற்குள்ளான விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூபாய் 32 கோடியே 18 இலட்சம் வழங்கப்பட்டது.

ஊரக வளர்ச்சியை பொறுத்தவரை, பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டத்தில், 2016–17ஆம் ஆண்டு முதல் 2019–20ஆம் ஆண்டு வரை 7,889 பணிகள் ரூபாய் 134.11 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு 4,044 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, விரைவில் முடிக்கப்படும். பங்களிப்புடன் திறனுக்கேற்ற வீடு கட்டும் திட்டத்தில் பெரம்பலூர் வட்டம், கவுல்பாளையம் கிராமம், துறைமங்கலம் திட்டப்பகுதியில் 504 அடுக்குமாடி குடியிருப்புகள் ரூபாய் 41.02 கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. சொந்த இடத்தில் வீடு கட்டும் திட்டத்தில் பெரம்பலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட

பகுதிகளில் 490 பயனாளிகளுக்கு ரூபாய் 147 லட்சம் மதிப்பீட்டில் வீடு கட்டும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, 283 வீடுகள் முடிக்கப்பட்டு, 207 வீடுகள் பணி முன்னேற்த்திலும் உள்ளன. பேரூராட்சி பகுதிகளில் 280 பயனாளிகளுக்கு ரூபாய் 8.40 கோடி மதிப்பீட்டில் பணிகள் எடுத்துக் கொள்ளப்பட்டு, 26 வீடுகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 254 வீடுகள் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது, பணிகள் விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ், 2020–21 ஆம் ஆண்டில் முதற்கட்டமாக 25 ஊராட்சிகளில் ரூபாய் 22.89 கோடி மதிப்பீட்டில் குடிநீர் இணைப்புப் பணிகள் துவங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த 73 கிராம குடியிருப்புகளுக்கு புதிய கூட்டுக் குடிநீர் திட்டம் ரூபாய் 22.84 கோடி மதிப்பீட்டில் என்னால் அறிவிக்கப்பட்டது, பணி விரைவில் துவங்கப்படும். பெரம்பலூர் நகராட்சிக்கு தனியாக கொள்ளிடம் ஆற்றினை நீர் ஆதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கும் திட்டம் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் என்னால் அறிவிக்கப்பட்டு, ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. விரைவில் பணிகள் துவங்கப்படும். 26.11.2020 அன்று தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் பெரம்பலூர் வட்டம், துறைமங்கலம் கிராமத்தில் 504 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்காக ரூபாய் 41.02 கோடி ரூபாய் மதிப்பீட்டில் என்னால் அறிவிக்கப்பட்டு, கட்டுமானப் பணிகள் நிறைவுற்று, திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பெரம்பலூர் மாவட்டத்தில் 4,162 சுய உதவிக் குழுக்களில், 54,129 மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். 2020–21ஆம் ஆண்டில் சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 196 கோடி ரூபாய் வங்கி இணைப்புக் கடன் வழங்கப்படுள்ளது. அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் திட்டத்தின் கீழ் இதுவரை 20,328 பயனாளிகளுக்கு அம்மா இருசக்கர வாகனத்திற்கான மானியம் வழங்கப்பட்டுள்ளது. 2019–20ஆம் ஆண்டில் 810 நபர்களுக்கு வாகன ஒதுக்கீடு வழங்கப்பட்டு, அதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

தொழில் துறையைப் பொறுத்தவரை, மத்திய அரசின் சொத்து பிணையில்லா அவசரகால கூடுதல் கடன் திட்டத்தின் இம்மாவட்டத்தைப் பொறுத்தவரை, 2069 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 38.99 கோடி கடன் ஒப்புதல்

அளிக்கப்பட்டுள்ளது. 2019–ல் இரண்டாவது உலக முதலீட்டாளர் மாநாட்டில் 98 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ரூபாய் 128.57 கோடி முதலீட்டில், 3,690 நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்த புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன. இதுவரை பெரம்பலூர் மாவட்டத்தில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட பிறகு, 33 நிறுவனங்கள் ரூபாய் 17.76 கோடி முதலீட்டில் துவங்கப்பட்டு, அதன்மூலம் 386 நபர்களுக்கு வேலை கிடைத்திருக்கின்றது. தற்போது இயங்கி வரும் எளம்பலூர் தொழிற்பேட்டைக்கு அருகில் புல எண் 27.23ல் உள்ள 7.60 ஏக்கர் பரப்பளவில் புதிய தொழிற்பேட்டை அமைக்க நிலம் கையகப்படுத்தப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

பெரம்பலூர் மாவட்டத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசால் பல்வேறு பணிகள் அறிவிக்கப்பட்டு அந்தப் பணிகளெல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்றையதினம் ரூபாய் 19 கோடியே 25 இலட்சம் மதிப்பிலான 4 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளன. ரூபாய் 24.41 கோடி மதிப்பீட்டிலான 8 கட்டடங்களுக்கு திறப்பு விழா செய்யப்பட்டுள்ளது. நலத்திட்டங்களைப் பொறுத்தவரை, 1,614 பயனாளிகளுக்கு 23 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இன்றைக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இப்படி பல்வேறு பணிகள் இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் பல பணிகள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றன.

மாண்புமிகு அம்மாவின் அரசு கடும் முயற்சி எடுத்ததன் விளைவாக, பெரம்பலூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதோடு மாண்புமிகு அம்மாவின் அரசால் அறிவித்த பெரும்பாலான திட்டங்கள் நிறைவு பெற்றிருக்கின்றன, பல திட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, இன்னும் சில திட்டங்கள் அரசின் பரிசீலனையில் இருக்கின்றதென்பது என்பதைத் தெரிவித்து, என் உரையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**